வருகின்ற 2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம்15-ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**

1. பவானி நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகள் பலமுறை ஏலம் நடத்தியும் ஏலம் கோர யாரும் முன் வராததால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி நிதி இழப்பினை தடுக்கவும், நகராட்சி வருவாயை மேம்படுத்தவும் , நகராட்சி அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாடகையை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். 264/2021/அ2, -ன்படி கடைகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க குழு அமைக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் :

| வ. எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. எம். தங்கராஜ், | மேலாளர் |
| 2 | திரு.எஸ்.ரவி , | வருவாய் ஆய்வாளர் |
| 3 | திரு. எஸ்.செந்தில்குமார், | துப்புரவு ஆய்வாளர் |
| 4 | திரு. என். அப்புசாமி, | இளநிலை பொறியாளர் |

காலியாகவுள்ள கடைகளின் விபரம்

| வ. எண். | கடை அமைவிடம் | கடை எண் |
|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் | 9 |
| 2 | புதிய பேருந்து நிலையம் | 10 |
| 3 | புதிய பேருந்து நிலையம் | 11 |
| 4 | புதிய பேருந்து நிலையம் | 12 |
| 5 | புதிய பேருந்து நிலையம் | 13 |
| 6 | புதிய பேருந்து நிலையம் | 19 |
| 7 | புதிய பேருந்து நிலையம் | 22 |
| 8 | புதிய பேருந்து நிலையம் | 23 |
| 9 | புதிய பேருந்து நிலையம் | 24 |
| 10 | புதிய பேருந்து நிலையம் | 25 |
| 11 | புதிய பேருந்து நிலையம் | 36 |
| 12 | புதிய பேருந்து நிலையம் | 37 |
| 13 | புதிய பேருந்து நிலையம் | 41 |
| 14 | புதிய பேருந்து நிலையம் | 42 |
| 15 | புதிய பேருந்து நிலையம் | 43 |
| 16 | செல்லியாண்டியம்மன் மார்க்கெட் | 7 |
| 17 | பழைய பேருந்து நிலையம் | 6 |
| 18 | பழைய பேருந்து நிலையம் | 15 |

மேற்படி குழு கடைகளை கள ஆய்வு செய்து, சந்தை மதிப்பு அடிப்படையில் மறுநிர்ணயம் செய்ய வேண்டிய கடைகளின் வாடகையினை நிர்ணயம் செய்யலாம் என கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

## அலுவலர் குழுவின் பரிந்துரை

| கடை எண். | அமைவிடம் | கடையின் அளவு சதுர அடி | 2016க்கு முந்தைய வாடகை | மறுநிர்ணயம் செய்த வாடகை | தற்பொழுது குழு நிர்ணயம் செய்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 9 | புதிய பேருந்து நிலையம் | 90 ச.அடி | 5360 | 9500 | 5000 |
| 10 | புதிய பேருந்து நிலையம் | 90 ச.அடி | 2285 | 9500 | 5000 |
| 11 | புதிய பேருந்து நிலையம் | 90 ச.அடி | 5819 | 9500 | 5000 |
| 12 | புதிய பேருந்து நிலையம் | 90 ச.அடி | 2927 | 9500 | 5000 |
| 13 | புதிய பேருந்து நிலையம் | 90 ச.அடி | 1920 | 9500 | 5000 |
| 19 | புதிய பேருந்து நிலையம் | 88 ச.அடி | 794 | 3500 | 2000 |
| 22 | புதிய பேருந்து நிலையம் | 96 ச.அடி | 702 | 7500 | 3000 |
| 23 | புதிய பேருந்து நிலையம் | 96 ச.அடி | 3280 | 7500 | 3000 |
| 24 | புதிய பேருந்து நிலையம் | 96 ச.அடி | 2579 | 7500 | 3000 |
| 25 | புதிய பேருந்து நிலையம் | 96 ச.அடி | 3018 | 7500 | 3000 |
| 36 | புதிய பேருந்து நிலையம் | 84 ச.அடி | 2515 | - | 2500 |
| 37 | புதிய பேருந்து நிலையம் | 84 ச.அடி | 2200 | 4500 | 2500 |
| 41 | புதிய பேருந்து நிலையம் | 84 ச.அடி | 2160 | - | 2500 |
| 42 | புதிய பேருந்து நிலையம் | 84 ச.அடி | 1785 | - | 2500 |
| 43 | புதிய பேருந்து நிலையம் | 84 ச.அடி | 1466 | - | 2500 |
| 7 | செல்லியாண்டியம்மன் மார்க்கெட் | 42 ச.அடி | 930 | 1263 | 500 |
| 6 | பழைய பேருந்து நிலையம் | 160 ச.அடி | 1750 | 1750 | 1000 |
| 15 | பழைய பேருந்து நிலையம் | 160 ச.அடி | - | - | 600 |
| | | | | | |
| | | | | | |

**புதிய பேருந்து நிலைய கடை எண்கள் : 9,10,11,12,13**

புதிய பேருந்து நிலைய கடை எண். 9,10,11,12,13 -ல் உள்ள ஐந்து கடைகள் பேருந்து நிலையத்தின் வடபுரத்தில் அமைந்துள்ள பகுதியில் வரக்கூடிய பேருந்து தடங்கள் ஈரோட்டில் இருந்து பவானி வழியாக மேட்டூர் , தர்மபுரி , கிருஷ்ணகிரி செல்லக்கூடிய நீண்ட துார பேருந்துகளும் பவானியில் இருந்து கோவை, சேலம் செல்லக்கூடிய பேருந்துகளும் அமைவிடமாக உள்ளது. பயணிகள் வருகை குறைவாக உள்ளது. மாலை 6 மணிக்கு பின் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் வருவதில்லை. எனவே கடை எண்கள் 9,10,11,12,13 க்கு மாத வாடகை ரூ. 5000/- என மறு நிர்ணயம் செய்யலாம்.

**புதிய பேருந்து நிலைய கடை எண்.19**

புதிய பேருந்து நிலைய கடை எண்கள். 19, புதிய பேருந்து நிலையம் சைவ உணவு விடுதி பின்புறம் சிறிய வழிதடத்தில் உயரமான படிக்கட்டுகளுடன் உள்ளது. மேற்கண்ட கடை இருப்பது பேருந்து பயணிகள் வரும் வழித்தடத்தில் இல்லை. மேற்கண்ட கடை எண் 19 க்கு மாத வாடகை ரூ. 2000/- என மறு நிர்ணயம் செய்யலாம்.

**புதிய பேருந்து நிலைய கடை எண்கள். 22,23,24,25**

புதிய பேருந்து நிலைய கடைகள் 22,23,24,25 ஆகிய 4 கடைகள் புதிய பேருந்து நிலைய அசைவ உணவு விடுதி எதிரில் குறுகிய வழித்தடத்தில் உள்ளது. பஸ் பயணிகள் நடமாட்டம் இல்லாத பகுதியாகும். மேற்கண்ட கடை எண்கள் 22,23,24,25 க்கு மாத வாடகை ரூ. 3000/- என மறு நிர்ணயம் செய்யலாம்.

**புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்கள் 36 மற்றும் 37**

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்கள் 36 மற்றும் 37 பேருந்து நிலையத்தின் தென்புரம் உள்ளது. மேற்கண்ட இடம் பேருந்து நிலையத்தின் கிழபுறம் கடைசியில் கட்டண கழிப்பிடம் அருகில் உள்ளது. மேற்கண்ட கடைகளின் முன்புறம் பேருந்துகள் எதுவும் நிற்பதில்லை. மேற்கண்ட கடை எண்கள் 36 மற்றும் 37 க்கு மாத வாடகை ரூ. 2500/- என நிர்ணயம் செய்யலாம்

**புதிய பேருந்து நிலைய கடை எண். 41, 42, மற்றும் 43**

புதிய பேருந்து நிலைய கடை எண். 41, 42, மற்றும் 43 பேருந்து நிலையத்தின் தென்புறம் கடைசியில் உள்ளது. மேற்கண்ட கடைகளின் முன் பேருந்துகள் எதுவும் நிற்பதில்லை. மேலும் பஸ் நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் அருகாமையில் உள்ளது. அதன் காரணமாக பேருந்து பயணிகளின் நடமாட்டம் இல்லாத நிலை உள்ளது. எனவே கடை எண்கள் 41,42 மற்றும் 43 க்கு மாத வாடகை ரூ. 2500/- என நிர்ணயம் செய்யலாம்.

**செல்லியாண்டியம்மன் மார்க்கெட் கடை எண்.7**

செல்லியாண்டியம்மன் கடை எண்.7 அரசு மகளீர் பள்ளிக்கு வடக்கு பகுதியில் மெயின்ரோட்டில் இருந்து பழைய பேருந்து நிலையத்திற்கு செல்லும் பாதையின் வடபகுதியில் அமைந்துள்ளது. சிமெண்ட் கான்கிரீட் நடை பாதை பகுதியில் உள்ளது. மக்கள் போக்குவரத்து மிக குறைவானதாக உள்ளது. எனவே கடை எண் 7 க்கு மாத வாடகை ரூ.500/- என நிர்ணயம் செய்யலாம்.

**பழைய பேருந்து நிலைய கடை எண். 15**

பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண். 15 கட்டண கழிப்பறை அருகில் உள்ளதால் கட்டிடம் கட்டப்பட்ட நாள்முதல் ஏலம் கோர முன் வராத காரணத்தால் சுகாதாரப்பிரிவில் வார்டு அலுவலகமாக செயல்பட்டு வந்தது. 09.12.2016 ஆம் ஆண்டு முதல் கடையாக குத்தகை ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் பழைய பேருந்து நிலையத்தில் மக்கள் நடமாட்டம் மிக குறைவாக உள்ளது. எனவே கடை எண். 15 க்கு மாத வாடகை ரூ. 600/- என நிர்ணயம் செய்யலாம்.

**பழைய பேருந்து நிலைய கடை எண். 6**

கடை எண். 6 பழைய பேருந்து நிலையத்திற்கு அனைத்து பேருந்துகளும் பழைய பேருந்து நிலையத்தில் நிற்பதில்லை. குறைவான பேருந்துகளே பழைய பேருந்து நிலையத்திற்குள் நின்று செல்கின்றன. ஆகவே பேருந்து பயணிகள் நடமாட்டம் குறைவாக உள்ளதால் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் குறைவான அளவே வியாபாரம் நடைபெறுகிறது . எனவே பழைய பேருந்து நிலையம் கடை எண் 6 க்கு மாத வாடகை ரூ.1000/- என நிர்ணயம் செய்யலாம்.

அலுவலக குறிப்பு:

1. பவானி நகராட்சிக்கு தொடர்ந்து ஏலம் போகாததால் ஏற்பட்டுள்ள தொடர் நிதி இழப்பை தடுக்கும் பொருட்டும் மேற்குறிப்பிட்ட கடைகளின் அமைவிடம் கருத்தில் கொண்டும் அலுவலர் குழுவின் பரிந்துரையை ஏற்கலாம்.

2. மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை அடிப்படையில், நாளிதழில் விளம்பரம் செய்தும், ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 264/2021/அ2)

2. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மற்றும் பவானி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 10.02.2021 தேதிய கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-21-ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள பரிந்துரை செய்துள்ளார்கள். மேற்காணும் கோரிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.11, பவானி வட்டாச்சியர் அலுவலகம் அருகில் தார் சாலை அமைத்தல் | 7.00 |
| 2. | வார்டு எண்.1,8 மற்றும் 9 சொக்கராயன் காடு (ISP கழிப்பிடம் அருகில்) சோமசுந்தரபுரம் கடைசி மற்றும் பழனிபுரம் 2வது வீதி குறுக்குசந்து ஆகிய பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 5.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.1181/2020/இ1)

3. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு 2021 - 2022 ஆம் ஆண்டு முதல் குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள 12 இனங்களுக்கும் 03.02.2021- ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட இனங்களுக்கு மட்டும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி தொகையினை தனி அலுவலரின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கோரியவர் , ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் மற்றும் ஏலத் தொகை | மூன்றாண்டு சராசரி | 2020-2021 குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | இனம் :1<br>பழைய வாரச்சந்தை மையத்தில் நடைபெற்று வரும் தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு சரக்கு கொண்டு வரும் சரக்கு வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | திரு.பி.செல்வம்<br>ரூ.31,01,000/- | ரூ.26,32,338/- | ரூ.27,61,763/- |
| 2 | இனம் : 9<br>செல்லியாண்டியம்மன் அங்காடியில் கடைகளுக்கு பின்புறமுள்ள இருச்சக்கர வாகனம் நிறுத்துமிடம் சுங்கம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.வி.ஸ்ரீதரன்<br>ரூ.2,15,000/- | ரூ.47,288/- | ரூ.49,613/- |

1. மேற்கண்ட 2 இனங்களுக்கு கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மூன்றாண்டு சராசரி மற்றும் சென்ற ஆண்டு குத்தகைத் தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

எனவே மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2021-2022 முதல் 2023-2024 வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

2. அரசு ஆணை எண். 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந.நி.4) துறை நாள்:19.09.2008 ன்படி மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய குத்தகை இனங்களுக்கு குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி உரிய காலக்கெடுவில் குத்தகை தொகையை செலுத்தி குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

| வ. எண். | குத்தகை இனம் | 2021-2022-ம் ஆண்டு குத்தகை தொகை | 2022-2023 -ம் ஆண்டு குத்தகை தொகை | 2023-2024 -ம் ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | இனம் 1<br>பழைய வாரச்சந்தை மையத்தில் நடைபெற்று வரும் தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு சரக்கு கொண்டு வரும் சரக்கு வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | ரூ.31,01,000/- | ரூ.32,56,050/- | ரூ.34,18,852/- |
| | இனம் : 9<br>செல்லியாண்டியம்மன் அங்காடியில் கடைகளுக்கு பின்புறமுள்ள இருச்சக்கர வாகனம் நிறுத்துமிடம் சுங்கம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.2,15,000/- | ரூ.2,25,750/- | ரூ.2,37,037/- |

நிபந்தணைகள்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கண்ட இனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.

2. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வினத்தை பெறவும் , வாரிசுதாரர்களுக்கு விருப்பமில்லை எனில் உரிமை மறு ஏலம் விடப்படும்.

3. வருமானவரி, தொழில்வரி, ஆகியவற்றினை குத்தகைத் தொகையில் கழித்துக் கொள்ள இயலாது. இதனை உடன் செலுத்தப்பட வேண்டும்.

4. 2021-22 -ம் ஆண்டு குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தணைகளை மீறி நடந்தால் குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு குத்தகைதாரர் பொறுப்பாவார்

மேற்கண்ட நிபந்தணைகளுடன் குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1450/2020/அ2)

4. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் TEMEPHOS EMULSIFIABLE 50% EC(Abate), Bacillus Thuringiensis 5% WP (B.T. Powder) கொள்முதல் செய்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்: 211, நாள்: 30.11.2020ன் வாயிலாக ஒப்புதல் வழங்கியுள்ளதால் இப்பணிக்கு 10.02.2021ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | |
|---|---|---|---|
| 1 | M/s Arunai Enterprises, 92/413, Mel Thindal, Thindal, Erode - 638 012. | TEMEPHOS EMULSIFIABLE 50% EC(Abate) | **Rs.737/-** (Per lit. Incl. all tax) |
| | | Bacillus Thuringiensis 5% WP (B.T. Powder) | **Rs.1172/-** (Per kg. Incl. all tax) |
| 2 | M/s Balaji Enterprises, 9/182, KM R Nagar, Nethaji street, Vasavi college, Elavamalai, Erode. | TEMEPHOS EMULSIFIABLE 50% EC(Abate) | **Rs.800/-** (Per lit. Incl. all tax) |
| | | Bacillus Thuringiensis 5% WP (B.T. Powder) | **Rs.1250/-**(Per kg. Incl. all tax) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்திட்ட M/s Arunai Enterprises, 92/413, Mel Thindal, Thindal, Erode-638 012 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)அவசர அவசியம் கருதி நோய் தடுப்பு பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்திட்ட M/s Arunai Enterprises, 92/413, Mel Thindal, Thindal, Erode - 638 012 அவர்களுக்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.281/2020/எச்1)

5. பவானி நகராட்சி உரக்கிடங்கில் “ No waste Incinerator machine” நிறுவும் பணிக்கு மேடை மற்றும் தண்ணீர் தொட்டி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.**5.50** இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.**247** நாள்.**31.12.20** அனுமதி அளித்துள்ளதின் பேரில் **05.02.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி | **0.12%** மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர். ஆர்.என். அன் கோ., | **0.79%** மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட **0.12%** சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1625/2020/இ1)**

**இடம்: பவானி**
**நாள்: 26.02.2021**

**(ஒம்) திரு.க.கதிர்வேல்**
**ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**

வருகின்ற 2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**

1. பவானி நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்தில் 9 பணியிடங்கள் காலியாக உள்ளதால் குடிநீர் பராமரிப்பு பணிகளில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் 5 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள உத்தேச செலவு ரூ.10.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. குடிநீர் பராமரிப்புஅவசியத்தை முன்னிட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.284/2021/இ1)

2. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு Gas Chlorine Cylinder சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.14 நாள்.29.1.2021 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.சிவாலிக் இரத்தினம் கெமிக்கல்ஸ், ஈரோடு | 0.16% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர்.ஜீபிசர் எண்டர்பிரைசஸ், ஈரோடு. | 1.64% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.16% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.சிவாலிக் இரத்தினம் கெமிக்கல்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.051/2021/இ1)

3. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு படிகாரம் விநியோகம் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.18 நாள்.29.1.2021 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் | 0.21% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.பி.ஏ.செல்லப்பன் | 2.50% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.21% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1573/2020/இ1)

4. நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பின் படி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 6 மற்றும் 15 மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபள்ளி அறிவிப்பு 15.02.2021ல் செய்யப்பட்டது அதன்படி 25.02.2021-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி விபரம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகையினம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபரகள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய கடை எண் 6 | 1.திரு.ஆர் .கரிகாலன்<br>த/பெ ராமதாஸ்<br>41-மெக்கான் வீதி<br>பவானி<br>ரூ.2050/-<br>2.திருமதி.சி.வளர்மதி<br>த/பெ சின்னையன்<br>206-நடராஜபுரம்<br>பவானி<br>ரூ.1550/-<br>3 திரு..ப.இளங்கோவன்<br>த/பெ பழனியப்பன்<br>160 சீனிவாசபுரம் எக்ஸ்டென்சன்<br>பவானி.<br>ரூ..2000/- | 1திரு..ப.இளங்கோவன்<br>த/பெ பழனியப்பன்<br>160 சீனிவாசபுரம்<br>எக்ஸ்டென்சன்<br>பவானி.<br>ரூ.1650 /- |
| 2 | பழைய பேருந்து நிலைய கடை எண் 15 | 1.திரு.ஆர் .கரிகாலன்<br>த/பெ ராமதாஸ்<br>41-மெக்கான் வீதி<br>பவானி<br>ரூ..650/-<br>2.திருமதி.சி.வளர்மதி<br>த/பெ சின்னையன்<br>206-நடராஜபுரம்<br>பவானி<br>ரூ.700/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |

அலுவலக குறிப்பு.

**கடை எண் 6**-ற்கு உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக கோரியுள்ள திரு.ஆர் கரிகாலன் த/பெ. ராமதாஸ் என்பவரின் ஏலத்தொகை ரூ.2050/- அரசாங்க மதிப்பை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**கடை எண** 15 -ற்கு உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக கோரியுள்ள திருமதி.சி.வளர்மதி த/பெ சின்னையன் என்பவரின் ஏலத்தொகை ரூ.700/- அரசாங்க மதிப்பை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

(ந.க.எண்:264/2021/அ2)

5. பவானி நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறு மின் விசை பம்புகள், விசை பம்புகள் மற்றும் கழிப்பிடங்களில் உள்ள ஏர்கம்பரஷர்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை 2021–22ம் நிதியாண்டு ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.13 நாள்.29.01.2021 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம்.முருகேசன் | 0.16% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.சி.சின்னுசாமி | 1.72% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.16% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முருகேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.002/2021/இ1)

6) நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபள்ளி அறிவிப்பு 19.02.2021ல் செய்யப்பட்டது அதன்படி 26.02.2021-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி விபரம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகையினம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபரகள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் (மூன்றாம் அழைப்பு) | ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை | திரு.ஆ.ரமேஷ் த/பெ ஆறுமுகம் , 220-வடக்கு வீதி ,ஆத்து கருப்பராயன் கோவில், குருப்பநாயக்கன் பாளையம்,பவானி. ரூ.184100/ |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் மொத்தம் 6-கடைகள் (மூன்றாம் அழைப்பு) கடை எண். 2 | 1.திரு.செல்லவேல் த/பெ முருகன் , 62-மகாத்மா காந்தி ரோடு பவானி. ரூ.7300/- 2.திரு.பாபு த/பெ கிருஷ்ணன் , 108-மகாத்மாகாந்தி ரோடு பவானி. ரூ.7400/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | கடை எண் 3 | 1.திரு.செல்லவேல் த/பெ முருகன், 62-மகாத்மா காந்தி ரோடு பவானி . ரூ.7400/- 2.திரு.கே.எம் பழனிச்சாமி த/பெ முருகேசன் , 129-காமராஜ் நகர் , பவானி , ரூ..7300/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | கடை எண் 5 | 1.திரு.கே.எம்.பழனிச்சாமி த/பெ முருகேசன் , 129-காமராஜ் நகர் , பவானி ரூ..7400/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | | 2.திரு.பாபு<br>த/பெ கிருஷ்ணன் ,<br>108-மகாத்மா காந்தி ரோடு<br>பவானி ரூ.7300/- | |
| 3 | பழைய பேரூந்து நிலைய கட்டணகழிப்பிடம் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் (மூன்றாம் அழைப்பு) | 1.திரு.என்.மகாதேவன்<br>த/பெ நாச்சிமுத்து, 210 D3 அய்யன்தோட்டம் ,<br>பவானி. ரூ.152000/-<br>2.திரு.என்.பிரபாகரன்<br>த/பெ நடராஜ் ,<br>99/115 பெருமாள்புரம்,<br>பவானி, ரூ.151800/- | 1.திரு.என்.மகாதேவன்<br>த/பெ நாச்சிமுத்து,<br>210D3 அய்யன்தோட்டம் ,பவானி.<br>ரூ.152200/- |
| 4 | நகராட்சிக்கு செந்தமான மீன்அங்காடியில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் (மூன்றாம் அழைப்பு) | 1.திரு.கே.மணியகாரன்<br>த/பெ கருப்பண்ணன்<br>44-தந்தைபெரியார் வீதி<br>.பவானி.<br><br>**ஏலம்கோர முன்வரவில்லை**<br><br>2.திரு.எம்.சூர்யராஜ்<br>த/பெ முனியப்பன்<br>4/152,கல்லிமேடு,<br>சமயசங்கிலி(அ)<br>திருச்செங்கோடு (மா)<br>நாமக்கல். ரூ..1405000/-<br><br>3.திரு.கே.ஆர்.கோவிந்தராஜ்<br>த/பெ ராமசாமி ,<br>66,தந்தைபெரியார்வீதி. பவானி.<br>**ஏலம் கோர முன்வரவில்லை**<br><br>4.திரு.கே.வெங்கட்ராகவன்<br>த/பெ கிருஷ்ணம்மாச்சாரி<br>13/4 காவேரிவீதி,<br>பவானி.<br>**ஏலம் கோர முன்வரவில்லை** | 1.திரு.கே.வெங்கட்ராகவன்<br>த/பெ கிருஷ்ணம்மாச்சாரி<br>13/4 காவேரிவீதி,<br>பவானி.<br>ரூ.1441449/- |
| 5 | ஆடுஅடிக்கும் தொட்டியில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் (மூன்றாம் அழைப்பு) | 1.திரு.பிரகாஷ்<br>த/பெ அர்ஜீனன்<br>186-மெயின்ரோடு<br>பவானி.<br>ரூ.52800/-<br><br>2.திரு.எம்.தனசேகர்<br>த/பெ ஆர்.எஸ்.முத்து<br>7-தோவபுரம்<br>பவானி.<br>ரூ..52700/- | 1.திரு.பிரகாஷ்<br>த/பெ அர்ஜீனன்<br>186-மெயின்ரோடு<br>பவானி.<br>ரூ..53200/-<br><br>2.திரு.எம்.தனசேகர்<br>த/பெ ஆர்.எஸ்.முத்து<br>7-தோவபுரம்<br>பவானி.<br>ரூ.52500/- |
| 6 | பவானி நகராட்சிக்கு சொந்தமான புன்னம் கிராமத்தில் உள்ள 10.44 ஏக்கர் புன்செய் நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமம் சர்வே எண் .170/5,172/1,2,3,4,5.6, 173/3,4.196/2,197 (மூன்றாம் அழைப்பு) | 1.பாலசுப்பிரமணியம்<br>த/பெ சண்முகம்<br>பாரதி நகர்<br>ஆவின்பால்பண்ணை எதிரில்.சித்தோடு.<br>ரூ.16800/-<br><br>திரு.லோகநாதன்<br>த/பெ ரங்கசாமி<br>77-சி-மைலாடி மெயின்ரோடு.<br>வெள்ளோடு வழி.<br>பெருந்துறை ரோடு.<br>ஈரோடு,<br>ரூ.16700/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |

அலுவலக குறிப்பு.

**வரிசை எண் 1.**திரு.ஆ.ரமேஷ் என்பவர் ரூ.184100/-ற்கு ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். இத்தொகையானது மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதாலும் உயர்ந்தபட்ச ஏலத்தொகையைவிட அதிகமாக உள்ளதாலும் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 2.**

கடை எண் 2-ற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திரு.கே.பாபு என்பவரின் ஏலத்தொகை ரூ..7400/- மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**கடை எண்.** 3 -ற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திரு.எம் .செல்லவேல் என்பவரின் ஏலத்தொகை ரூ.7400/- மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**கடை எண்** 5- ற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திரு.கே.எம்.பழனிசாமி என்பவரின் ஏலத்தொகை ரூ..7400/- மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 3.** திரு.என்.மகாதேவன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி ரூ..1,52,200/- மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதாலும் உயர்ந்தபட்ச ஏலத்தொகையைவிட அதிகமாக உள்ளதாலும் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 4 .** திரு.கி.வெங்கட்ராகவன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.1441449/- ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார் . இத்தொகையானது மூன்றாண்டு சராசரியை விட குறைவாகவும் அரசாங்க மதிப்பை விட அதிகமாக உள்ளதாலும் மன்றம் முடிவு செய்யலாம்.

**வரிசை எண் 5.** திரு.ஆ.பிரகாஷ் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.53200/- ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார் இத்தொகையானது மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 6** .திரு.பாலசுப்பிரமணியம் என்பவர் உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக ரூ.16800/- ஏலம் கோரியுள்ளார் .இத்தொகையானது அரசாங்கமதிப்பை விட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

(ந.க.எண்:1450/2020/அ2)

7) நகராட்சிக்கு சொந்தமான முன்றாண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபள்ளி அறிவிப்பு 5.02.2021ல் செய்யப்பட்டது அதன்படி 19.02.2021-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி விபரம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகையினம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரு. | ஒப்பந்தபுள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் ஒரு பூக்கடை வைத்துக்கொள்ளும் உரிமம்.(ஐ.யு.டி.பி.திட்டக்கடை எண் 1-ற்கு முன்புறம் பில்லருக்கு அருகில் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.(இரண்டாம் அழைப்பு) | 1.திருமதி.ஜெ.பாக்கியம்<br>க/பெ ஜெயராமன்<br>114-பழைய பஸ் ஸ்டேண்டு ரோடு<br>பவானி<br>ரு.59500/-<br><br>2.திருமதி.கே.சங்கீதா<br>க/பெ கரிகாலன்<br>41-மெக்கான் வீதி<br>பவானி<br>ரு.59200/- | ஒப்பந்தபுள்ளி ஏதும் பெறப்படவில்லை |

அலுவலக குறிப்பு.

உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திருமதி.ஜெ.பாக்கியம் க/பெ ஜெயராமன் என்பவரின் ஏலத்தொகை ரூ.59500/- மூன்றாண்டு சராசரி மதிப்பை விடவும் அரசாங்க மதிப்பை விடவும் அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

(ந.க.எண்:1450/2020/அ2)

இடம்: பவானி
நாள்: 26.02.2021

(ஒம்) திரு.க.கதிர்வேல்
ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்
பவானி நகராட்சி

வருகின்ற 2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி வெள்ளிக் கிழமை முற்பகல் 11 .00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் கடிதம் ந.க.எண்.17731/2019/பி3, நாள்: 11.01.2021 தேதிய கடிதத்தில் பவானி நகராட்சி உரக்கிடங்கில பழைய குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்தும் பணி முடிவுற்ற பின்று அந்த இடத்தின் மண்ணைதரப்பரிசோதனை செய்யவும் மற்றும் இந்த இடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்று நீரை தரப்பரிசோதனை செய்து அறிக்கை அனுப்புமாறு அறிவுறுத்தியுள்ளார். அதன்பொருட்டு கீழ்கண்ட ஆய்வகங்களில் தரப்பரிசோதனை செய்ய விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| பரிசோதனை பொருள் | பரிசோதனை ஆய்வகம் | கட்டணம் |
|---|---|---|
| 1. ஆழ்துளை கிணற்று நீர் தரப்பரிசோதனை (Heavey Metals) | Sitarc Scientific and Industrial Testing and Research centre Coimbatore -6 | ரூ.5782/- (including GST) |
| 2. மண் பரிசோதனை மற்றும் மண் வகை ( Heavey Metals and Soil type ) | Enviro Farmers labs & Technologies | ரூ.5664/- (including GST) |
| | மொத்தம் | ரூ.11446.00 |

மேற்கண்ட கட்டணங்களை உரிய ஆய்வகங்களுக்கு செலுத்த மொத்த தொகை ரூ.11446/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.557/2018/இ1)

3. பவானி நகராட்சி நவீன எரிவாயு தகன மேடை (Gasifier crematorium) இயக்குவதற்காக வழங்கப்பட்ட அனுமதியினை 2021 -2023 ஆண்டுக்கு புதுப்பித்துக் கொள்ள District Environmental Engineer, Tamil Nadu Pollution control Board Perundurai - அவர்களின் கடிதம் Lr. No. F.PND 0503/GS/DEE/TNPCB/PND/2021 Dated : 12.02.2021 இல் Water Act (2021 -2023 ) ரூ.10100.00 மற்றும் Air Act ( 2021 - 2023 ) ரூ.10100.00 மொத்தம் ரூ.20200/- ஐ வங்கி வரை வோலையாக செலுத்தி 2021 -2023 ஆண்டுக்கு புதுப்பித்துக் கொள்ளவும் மேற்கண்ட தொகைக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1171/2019/இ1)

4. திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்க பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் ( BOVs) 10 எண்ணிக்கை கடந்த 28.12.2018 ஆம் தேதியன்று புதியதாக வாங்கப்பட்டு நகரில் கழிவுகள் சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களை தொடர்ந்து நல்ல நிலையில் இயக்க கடந்த 01.01.2020 முதல் 31.12.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 10 எண்ணிக்கை கடந்த 20.09.2019-ல் பேட்டரியினால் இயங்கும் வாகனங்களின் பராமரிப்பு காலம் 31.12.2020-ந் தேதியுடன் முடிவடைந்து விட்டதால் அவ்வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே 20 எண்ணிக்கை பேட்டரி வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1628/2019/ எச்1)

5. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, குருநாதன் வீதியில் அமைந்துள்ள,

1. சரவணா மருத்துவமனை செல்லும் வழியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றின் கை பம்பு அமைப்பு.

2. சுகுணா பால் பண்ணை அருகில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றின் கை பம்பு ஆகிய இரண்டு கை பம்பு அமைப்புகளும் பொது மக்கள் போக்குவரத்துக்கு இடையூராகவும், பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் இருப்பதாலும் அப்பகுதியில் அமைந்துள்ள கைபம்பு அமைப்பினை அகற்றி விட்டு ஆழ்துளை கிணற்றினை பாதுகாப்பாக மூடி வைப்பதற்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.0287/2021/இ1)

6) இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் பயணங்கள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச பயண பட்டியல் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.292/2017/பி1)

7) பவானி நகராட்சியில் 2020-21 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு மற்றும் 2021-2022 ஆம் ஆண்டு உத்தேச வரவு செலவு அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.011/2017/பி1)

8) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கோவிட்-19, மற்றும் கொசுக்களின் மூலம் பரவும் டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய் மற்றும் இதர நோய்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளுக்கு விழிப்புணர்வு விளம்பர அறிவிப்புகள் தேவைப்படும் போது அவ்வப்போது அச்சடித்து பொது மக்களுக்கு விநியோகிக்க ரூ. 5.00 இலட்சத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண். 229 நாள் 31.12.2020 -ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு 08.01.2021 -ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் M/s Kovilpati Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd., Ind. No. Tuti.9, Kovilpatti - 628 501 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்றத் தீர்மானம் எண். 6 நாள்: 29.01.2021 -ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க. எண்: 1669/2020/எச்1, நாள்: 8.01.2021-ன் படி கீழ்கண்டவாறு விழிப்புணர்வு அறிவிப்புகளை ( Sticker) விநியோகிக்க பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | விநியோகம் செய்ய வேண்டிய பொருட்களின் விபரம் | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கொரோனா விழிப்புணர்வு சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர் | 7000 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் | 7000 |
| 3 | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் | 5000 |

மேற்கண்டவாறு பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கண்ட விழிப்புணர்வு அறிவிப்புகள் மற்றும் ஸ்டிக்கர்கள் பெறப்பட்டு தொகை ரூ. 2,87,175/-க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கு ரூ. 5.00-இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ள போதிலும் விழிப்புணர்வு அறிவிப்புகள் மற்றும் ஸ்டிக்கர்கள் தற்போது தேவைப்படாததாலும் நகராட்சியின் நிதி நிலைமையின் கருத்தில் கொண்டும் இப்பணியினை முடித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு இப்பணியினை ரூ.2,87,175/-க்குள் முடித்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்: 1669/2020/எச்1)

9) பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் உரக்கிடங்கில் உள்ளதிடக்கழிவுகளை நவீன முறையில் எரித்து அப்புறபடுத்துவதற்கான இயந்திரம் (NO WASTE INCIRENATOR MACHINE) உரக்கிடங்கில் நிறுவ "ஒளிரும் ஈரோடுபவுண்டேசன்" நிறுவனத்தார் அவர்கள் அவர்களின் சொந்த செலவில் இலவசமாக நிறுவும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிக்கு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழ் கட்டணம் (Consent Fee) முறையே Water மற்றும் Air Acts க்கு மொத்த தொகை ரூ.8800/-ஐ தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறை அவர்களுக்கு செலுத்த மன்றஅனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுநிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரஅவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1625/2020/இ1)

10) பவானி நகராட்சிக்குட்பட்டஅனைத்து வார்டு பகுதிகளில் உள்ள காவிரி குடிநீர் மற்றும் பிறபயன்பாட்டிற்கு பயன்படும் ஆழ்துளை கிணற்று நீர் ஆகியவைகளின் நீருந்து குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் கசிவுகளை உடனுக்குடன் சரிபார்த்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2021-2022-ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2021-2022ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.213/2021/இ1)

**11.** தமிழக சட்டமன்ற தேர்தல் **2021–22**ம் ஆண்டு நடைபெற உள்ள காரணத்தினால், பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 45 எண்ணிக்கை வாக்குசாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட 45 எண்ணிக்கை வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க மதிப்பீடு ரூ.**2.00** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்தல் அவசரம், அவசியம் கருத்தில் கொண்டு இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**1)** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0214/2021/இ1)

**12)** தமிழக சட்டமன்ற தேர்தல் **2021–22**ம் ஆண்டு நடைபெற உள்ள காரணத்தினால், பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 45 எண்ணிக்கை வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட 45 எண்ணிக்கை வாக்குச்சாவடி மையங்களில் பொது சுகாதாரம் பேணுவதற்க்கு கிருமிநாசினி, பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பெனாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்க்கு சுமார் 1 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் அவசரம் அவசிய கருத்தில் கொண்டு இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.64/2020/எச்1)

13) வருகின்ற தமிழக சட்டமன்ற தேர்தல் 2021 ல் நடைபெற உள்ள காரணத்தினால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இடங்களில் பேனர்கள், பிளக்ஸ் பேனர்கள், சுவரொட்டிகள் மற்றும் சுவர் விளம்பரங்களை அப்புறப்படுத்த ஏதுவாக சுண்ணாம்புத்தூள் மற்றும் ஒயிட்சிமெண்ட் போன்ற பொருட்களை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.20,000/—ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.64/2020/எச்1)

14)பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களின் விவரப்படி புதிய தெரு விளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 | சொக்காரம்மன் நகர் | ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் அமைத்தல் | 7 எண்ணிக்கை |
| 2. | வார்டு எண். 2 | காவேரி வீதி | | 1 எண்ணிக்கை |
| 3. | வார்டு எண். 3 | அண்ணா நகர் | | 3 எண்ணிக்கை |
| 4. | வார்டு எண். 4 | சின்னப்ப கவுண்டர் லே அவுட் | | 2 எண்ணிக்கை |
| 5. | வார்டு எண். 7 | திருவள்ளுவர் நகர் | | 6 எண்ணிக்கை |
| 6. | வார்டு எண். 8 | அந்தியூர் ரோடு | | 1 எண்ணிக்கை |
| 7. | வார்டு எண். 9 | பழனிபுரம் | | 2 எண்ணிக்கை |
| 8. | வார்டு எண். 17 | மண்தொழிலாளர் வீதி அம்மன் நகர் | | 4 எண்ணிக்கை |
| 9. | வார்டு எண். 5 | குருநாத கவுண்டர் வீதி | | 2 எண்ணிக்கை |
| | | | மொத்தம் | 28 எண்ணிக்கைகள் |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.0253/2021/இ1)

15) இந்நகராட்சிக்கு சொந்தமான அந்தியூர் பிரிவில் அமைந்துள்ள கடை எண்கள் 2,3,4 ஆகிய கடைகளுக்கு குத்தகை உரிமம் 28.02.2021-ல் முடிவடைவதால் குத்தகை உரிமத்தை புதுப்பித்து தர கோரி மனு கொடுத்துள்ளனர் அதன்படி ஏற்கனவே உள்ள மாதவாடகை தொகையிலிருந்து 15% சதவீதம் உயர்வு செய்து 01.03.2021 முதல் முன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கலாம்.

மேலும் அதில் ஒன்பது மாத வாடகை வித்தியாசத் தொகையை முன் வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் கீழ்கண்ட 3 கடைகள் புதிய வாடகை விபரம் பின்வருமாறு.

| கடை எண் | குத்தகைதாரர்களின் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு | புதிய வாடகை | வரிவிதிப்பு எண் |
|---|---|---|---|---|---|
| 2 | திரு.செல்வகுமார் | 7000 | 1050 | 8050 | 055/79008 |
| 3 | திருமதி.மாலதி | 7000 | 1050 | 8050 | 055/79009 |
| 4 | திருமதி .எம்.செல்வி | 7000 | 1050 | 8050 | 055/79007 |

மேற்கண்ட கடைகளை புதுப்பித்து தர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 2331/2016/அ2)

16) பவானி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் "B" பிரிவு அங்கீகாரம் வரும் 16.04.2021ல் ஓராண்டு காலம் முடிவடைகிறது. எனவே மேற்படி பேருந்துநிலையத்தின் அங்கீகராத்தினை மேலும் ஓராண்டுகாலத்திற்கு 17.04.2021 முதல் 16.04.2022 வரை புதிப்பிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் ஈரோடு அவர்களின் அங்கீகாரம் பெறுவதற்கான மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 87/2020/அ2)

17). உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர், ஈரோடு அவர்களின் 19.02.2021 ஆம் தேதிய கைபேசி தகவலில் பவானி நகராட்சியில் 2014-15 முதல் 2018-19 வரையிலான ஆண்டு கணக்குகள் முழுவதையும் ஸ்கேன் செய்து 3 குறுந்தகடுகளில் பதிவு செய்து 22.02.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட பணியினை உடனடியாக செய்து முடிக்க போதிய வசதி அலுவலகத்தில் இல்லாததால் தனியார் ஜெராக்ஸ் கடையின் மூலம் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் அவசர அவசியம் கருதி கணேசா ஜெராக்ஸ் பவானி நிறுவனத்திடம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. செலவுத் தொகை ரூ.4500/- ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 482/2016/பி1)

18. பவானி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 24-ல் மீன் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. மீன்மார்கெட்டில் பராமரிப்பு பணி செய்ய வேண்டியுள்ளது. பராமரிப்பு பணிகள் செய்ய ரூ.6.00 இலட்சம் ஆகும் என மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 183/2021/இ1)

19. பவானி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 12-ல் தினசரி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகள் மற்றும் shed ஆகியவற்றை பழுது பார்க்க மதிப்பீடு 6.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.280/2021/இ1)

20) பவானி நகராட்சி அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாத மின்கம்பங்களில் சுமார் 50 எண்கள் 15 வாட்ஸ் LED தெருவிளக்குகள் பொருத்தி பொது மக்களுக்கு வசதியை ஏற்படுத்தி கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.284/2021/இ1)

21. பவானி நகராட்சி - தெருவிளக்கு புதியதாக அமைக்கப்பட உள்ள பகுதிகள்

1. எஸ். கே.டி வீதி
2. சொக்கராயன் காடு
3. காமராஜ் நகர் முதல் வீதி
4. அம்மன் நகர்
5. தேவபுரம்
6. ஆர்.எஸ்.எப்.822 மக்கான் வீதி

பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக பயன்படுத்தப்படும் பகுதிகள் என்பதால் அப்பகுதிகளில் புதிய தெருவிளக்கு அமைப்பு ஏற்படுத்த TANGDCO – விற்க்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவினம் 1,00,000.00 ( ஒரு இலட்சம்) ஆகும். செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.83/2020/இ1)

இடம்: பவானி

நாள்: 26.02.2021

(ஒம்) திரு.க.கதிர்வேல்
ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்
பவானி நகராட்சி